நகராட்சி அலுவலகம்
உசிலம்பட்டி
நாள்13.052025

## அவசரக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு விசுவாசு வருடம் சித்திரை 31ம் நாள் மே மாதம் நாள்.14.05.2025 புதன்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் உசிலம்பட்டி நகராட்சி நகர்மன்றத் தலைவர்(பொ) மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் அவர்கள் தலைமையில் அவசரக் கூட்டம் நகர்மன்ற கூடத்தில் நடைபெற இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

நகர்மன்றத்தலைவர்(பொ)
நகர்மன்ற துணைத்தலைவர்
உசிலம்பட்டி நகராட்சி

---

<u>மன்றப்பொருள் –1</u>

மாண்புமிகு தமிழகமுதலமைச்சர் அவர்களின் 05.04.2025ம் தேதிய சட்டமன்ற விதி–110ன் கீழ் முன்னால் சட்டமன்ற உறுப்பினரும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு.மூக்கையாத்தேவர் அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்க அறிவித்தனை தொடர்ந்து, உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண் 1886/2025/ஆ1 நாள் 07.05.2025ன் படியும் உசிலம்பட்டி நகராட்சி சர்வே வார்டு–1, பிளாக்–14, நகரளவை எண்.17 மற்றும் 18–இல் அமைந்துள்ள இடம் நகர்சார் ஆய்வர் அவர்களுடன் நேரில் ஆய்வு செய்யப்பட்டு வரைபடத்துடன் அறிக்கை பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட நகரளவை எண். 17–இல் 0.36.50.0 ஹெக்டேர் பரப்பளவும். நகரளவை எண். 18–இல் 0.26.00.0 ஹெக்டேர் சர்க்கார் புறம்போக்கு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி என நகர அளவை கணக்குகளில் தாக்கலாகியுள்ள இடத்தில் திரு. மூக்கையாத்தேவர் அவர்களுக்கு மணி மண்டபம் அமைப்பதற்கு தடையில்லாச்சான்று (NOC) வழங்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்645/எப்1/2025)

தீர்மானஎண்: 846
தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

மன்றப்பொருள் –2

15வது மத்திய நிதிக்குழு ஆணைய திட்டம் 2021–22–இன் கீழ் 100 எண்ணம் தெரு மின் விளக்குகள் பொருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி தெருமின் விளக்குகளுக்கான Switch Box–இல் மீட்டர். வயர். Insulator பொருத்த வேண்டியுள்ளதால் கீழ்க்கண்ட இடங்களில் பொருத்துவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | தெருக்களின் பெயர் | கேட்பு தொகை |
|---|---|---|---|
| 1 | 21 | வில்லாணி சாலை<br>பதிவு எண் 183012533 | ரூ.80194/– |
| 2 | 21 | வில்லாணி சாலை<br>பதிவு எண் 183012534 | ரூ.80194/– |
| 3 | 22 | பழைய மண்ணெண்ணெய் குடோன் தெரு–I<br>பதிவு எண் 183012531 | ரூ.40179/– |
| 4 | 22 | பழைய மண்ணெண்ணெய் குடோன் தெரு–II<br>பதிவு எண் 183012531 | ரூ.40179/– |
| 5 | 22 | கோவை பேக்கரி பின்புறம்<br>பதிவு எண் 183012528 | ரூ.41564/– |
| 6 | 22 | மகாலிங்கம் லேத் தெரு<br>பதிவு எண் 183012525 | ரூ.41564/– |
| 7 | 21 | சின்னமாயன் வாத்தியார் தெரு<br>பதிவு எண் 183012532 | ரூ.25911/– |
| 8 | 21 | மர அறுவை மில் தெரு<br>பதிவு எண் 183012535 | ரூ.25911/– |
| 9 | 20 | வெள்ளைசாமி காம்பவுண்ட் பின்புறம்– I<br>பதிவு எண் 183012561 | ரூ.20900/– |
| 10 | 20 | வெள்ளைசாமி காம்பவுண்ட் பின்புறம்– II<br>பதிவு எண் 183012562 | ரூ.20900/– |

| | | | |
|---|---|---|---|
| 11 | 20 | TRMS காம்பவுண்ட் பின்புறம் –I<br>பதிவு எண் 183012563 | ரூ.20900/– |
| 12 | 15 | கருக்கட்டான் பட்டி Additional Load<br>பதிவு எண் 183012526 | ரூ.39786/– |
| மொத்தம் | | | ரூ.478182/– |

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2089/2022/ இ1

தீர்மான எண் : 847

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

---

மன்றப்பொருள்–3

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 22 பேரையூர் ரோடு மேற்கு தெருவில் தெருவின் நடுவில் உள்ள மின் கம்பத்தை மாற்றி அமைக்க மின் வாரிய DCW திட்டத்தின் கீழ் மதிப்பீட்டு தொகை ரூ.12310/– மற்றும் சரக்கு சேவை வரி 18 % செலுத்துவதற்கு நகர்மன்ற தீர்மான எண் 803 நாள் 12.03.2025–இல் அனுமதி வழங்கப்பட்டது. தற்போது மேற்படி மின் கம்பத்தை மாற்றி அமைக்க ரூ.17157/– கேட்பு செலுத்த கோரி தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே கூடுதல் தொகையான ரூ.17157/– மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 99/2025/இ1

தீர்மான எண் : 848

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

# உசிலம்பட்டி நகராட்சி

## நகர்மன்ற அவசர கூட்டம் நாள் 14.05.2025 நேரம் 11.00 மணி

## மேஜை கூட்டப்பொருள்

ன்றப்பொருள்

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 8 சிவன் காளைத் தேவர் தெரு, காளியம்மன் காவில் தெருவில் புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க 02.05.2025 அன்று ப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வக்கப்படுகிறது.

| .எ. | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பு நோக்கு பட்டியலின் படி |
|---|---|---|---|---|
| | வார்டு எண் 8 சிவன் காளைத் தேவர் தெரு மற்றும் காளியம்மன் கோவில் தெருவில் உள்ள பழைய வாறுகால்களை உடைத்து அப்புறபடுத்தி புதிதாக சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் | 9.00 | M/s ரவிக்குமார் கான்ட்ரக்டர் | 0.05% குறைவு |
| | | | M/s கே.பி.கே கன்ஸ்ட்ரக்ன் | 3.00% அதிகம் |

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் னுமதி வேண்டப்படுகிறது.

லுவலகக்குறிப்பு

ன்றம் அனுமதி வழங்கலாம்.

.க.எண் 67/2025/இ1

தீர்மான எண் : 849

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

சி. தேன்மொழி

நகர்மன்ற துணை தலைவர்
மற்றும் நகர்மன்றத் தலைவர் (பொ)
உசிலம்பட்டி நகராட்சி

உசிலம்பட்டி நகராட்சி

நகர்மன்ற அவசரக்கூட்டம் நாள். 14.05.2025 நேரம் காலை 11.00 மணி

மேஜை கூட்டப்பொருள்

மன்றப்பொருள் –2

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 32658/ஆர்-1/2023, நாள். 16.05.2025-இல் மாநகராட்சி / நகராட்சி தமிழ்நாடு ஆரம்ப கல்விச்சட்டம் 1920 பிரிவு 34-இல் அரசின் முன் அனுமதியுடன் சொத்துவரியுடன் கல்வி வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன் விகிதத்தினை 35(1)-இல் சொத்துக்களின் ஆண்டு மதிப்பில் 5% மிகாமல் விதிக்க வரையறை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 (திருத்தம்) 2022 பிரிவு 80-இல் நகர்மன்றங்கள் கல்வி வரிவிதிக்க வழிவகை செய்யப்பட்டு, பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து பிரிவு 91-இல் இரண்டு அரையாண்டு சொத்துவரி மதிப்பில் 5% விழுக்காட்டிற்கும் மிகாமல் விதிப்பு செய்ய வரையறை செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டு பகுதியிலும் சொத்துவரிவிதிப்புக்கு முறையே ஆறு மாதத்திற்கு ஒருமுறை 2.5% கல்வி வரிவிதிக்கவும், மேற்படி கல்வி வரியினை விதிப்பு செய்யப்பட உள்ள விவரத்தினை விளம்பரம் செய்து, அதன் மீதான கருத்துக்கள் மற்றும் முறையீடுகள் இருந்தால் அதனை பெற்று குறிப்பிட்ட நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1775/2021/அ1)

தீர்மான எண் : 850

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.